பனைச் செல்வம்

(திங்கள் வெளியீடு)

ஆசிரியர்:
வே. வ. இராமசாமி

வெளியிடுவோர்:
சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்.
சென்னை-17.

சோபகிருது - மார்கழி

விலை : 25 காசு

பொருளடக்கம்

			பக்கம்
1.	"கள் உற்பத்தி செய்யமாட்டோம்"—(தலையங்கம்)	...	3
2.	மரமேற்றுப் போதகர் திரு. வி. இராமசாமியின் அரிய சாதனை—திரு. தல்வார்		5
3.	நாட்டுச் செக்கு எண்ணெய்க்கு புத்துயிர் அளிக்கப்படுகிறது	...	7
4.	பனைத் தொழில் வல்லுநர் வாழ்க்கை நிலை	...	9
5.	புதிய கண்டுபிடிப்புக்களின் பொறுப்பாளர்கள்	...	11
6.	பனை ஓலை, ஈர்க்குகள்	...	12
7.	நாம் ஏன் அஞ்சவேண்டும்?—மாங்குடி என். ஸி. எஸ்.	...	15
8.	சேலம் மாநாட்டு ஏற்பாடுகள் பற்றிய விவரம்	...	23

ஆண்டுச் சந்தா ரூ. 3

பனைச் செல்வம்

(மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன வெளியீடு)

பனை 4 சோபகிருது ௵ மார்கழி ௴ பாளை 3

"கள் உற்பத்தி செய்ய மாட்டோம்"

அண்மையில் திட்டக் கமிஷனின் மதுவிலக்கு பரிசீலனைக் கமிட்டி சென்னைக்கு வந்ததாகத் தெரிகிறது. அச்சமயம் இங்குள்ள சிலர் மதுவிலக்கு திட்டத்தை துரிதப்படுத்துவதற்கு பதிலாக கள்ளை உற்பத்தி செய்வதற்கு அனுமதிக்கவேண்டும் என்றும், கள்ளில் அதிக போஷாக்குச் சத்து இருப்பதாகவும், அதற்கு விதி விலக்கு தரவேண்டுமென்றும், கூறி இருப்பதாக பத்திரிகை வாயிலாக அறிந்தோம். பதநீரில் உள்ள வைட்டமின்கள் கள்ளில் இல்லை. ஆனால் போதை தரும் லாகிரி குணம் பதநீரில் இல்லை. கள்ளை மறந்து மகிழ்ச்சியுடன் வாழும் கிராமங்களிடையே மறுபடியும் இதை புகுத்தி கிராமங்களின் அமைதியையும், இல்வாழ்க்கையையும், பொருளாதாரத்தையும் சீர்குலைக்க முயலவேண்டாம்.

கிராமப்புறங்களில் மது அரக்கனை ஒழித்த பிறகு, ஒரு புதிய மலர்ச்சி உண்டாகி விட்டது. கிராமங்களில் எங்கும் மாலை நேரங்களில் அமைதியும், குதுகலமும், பொருளாதாரமும் சீர்பட்டு கொஞ்சங் கொஞ்சமாக வாழ்க்கைத் தரம் உயரும் இந்த நேரத்தில் மறுபடியும் மது தலையிடக்கூடாது என்பதை வலியுறுத்திக் கூறுகிறோம்.

ஏதோ ஒரு சில குற்றங்கள் இங்கும் அங்கும் சிற்சில இடங்களில் ஏற்படலாம். அதற்காக எதிர்கால சந்ததிகளேயே கள் அரக்கனுக்கு பலி யாக்குவது பொருந்தாத செயலாகும். இப்போது சிறுவர்களுக்கு கள் என்ருல் என்ன என்று தெரியாது; அதன் குணத்தைப் பற்றி அறியார். இந்த நல்ல காரியத்தை நாம் கைவிட்டுவிடக் கூடாது. இந்நிலேயில் முன்னுல் கள் இறக்கி வந்த எல்லோரும் இப்போது மும்முரமாக பனேவெல்ல உற்பத்தியில் ஈடுபட்டு 'மக்களின் உணவுப் பொருளே நாம் உற்பத்தி செய்கிருேம்' என்ற உயர்ந்த நோக்கோடு பணியாற்றி வருகிருர்கள். அவர்கள் முயற்சியில் இன்று பனேத் தொழில் வளர்ந்து வருகிறது. அன்று கள் தயாரித்தவர்கள் இன்று இனிமை யான பனேவெல்லம், பனங் கற்கண்டு, பதநீர் முதலியவற்றை தயாரித்துக் கொண்டு இருக்கிருர்கள்.

மது இறக்குவதினுல் அவர்கள் அடைந்த சீர்குலேவை போக்க கூட்டுறவு சங்கங்கள் மூலம் அரும்பாடுபட்டு வருகிருேம். 1964—65-ம் ஆண்டிற்கு பனேத் தொழில் அபிவிருத்திக்காக ஒரு கோடியே 85 லட்சம் ரூபாய் நம் அரசாங்கம் கொடுத்திருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிருேம். எனவே கள் இறக்குவதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது. அப்படிக் கொடுத்தாலும் உற்பத்தியாளர்களாகிய நாங்கள் கள்ளே உற்பத்தி செய்து "வருங்கால சந்ததிகளே கெடுக்கும் ஒரு கெட்ட காரியத்தை செய்தவர்கள் என்று எங்களே மாசு படுத்திக் கொள்ள மாட்டோம்" என்று உறுதியாகக் கூறிக் கொள்கிருேம்.

இப்பிரச்சினேயில் தமிழ்நாடு அரசாங்கம் மதுவிலக்கை மேலும் மேலும் தீவிரப்படுத்துவது என்று கொண்டிருக்கும் உறுதியை பாராட்டுகின்ருேம்.

உற்பத்தியைப் பெருக்கி
நாட்டைக் காப்போம்

மரமேற்றுப் போதகர்

திரு. வி. இராமசாமியின் அரிய சாதனை

ஒரே நாளில் 100 தென்னை மரங்களில் பதநீர் இறக்கும் போதகர் திரு. வி. இராமசாமியின் அரிய சாதனைபற்றி, நஞ்சுண்டாபுரம், தென்னை வழிகாட்டி நிலைய சூப்பிரிண்டெண்டெண்ட் திரு. தல்வார் அவர்கள் எழுதிய கட்டுரை கீழே தரப்பட்டுள்ளது.

வழக்கமாகவே கோயம்புத்தூர் மாவட்டம் தென்னை, பனைவெல்லம் உற்பத்தி செய்யப்பட்டுவரும் பகுதி ஆகும். இம்மாவட்டத்தில் 249 பனைவெல்லம் உற்பத்தி செய்யும் ஆரம்ப கூட்டுறவு சங்கங்கள் உள. மொத்தம் 20,000 தீவிர பதநீர் இறக்கும் வல்லுநர் உறுப்பினர்களாயுள்ளார்கள். இவர்களில் தென்னையில் பதநீர் இறக்குபவர்கள், 11,000 பேர்கள் இருக்கலாமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. வருஷம் பூராவும் தென்னை மரங்களில் பதநீர் இறக்கலாம். ஆகையால், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள வல்லுநர்களுக்கு ஆண்டு முழுதும் வேலைவாய்ப்பு கிடைக்கிறது. இந்தியாவிலுள்ள இதரப் பகுதிகளைப் போலல்லாமல், கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொடர்ந்து ஒன்று முதல் மூன்று ஆண்டுகள் வரை தென்னைகளிலிருந்து பதநீர் இறக்கப்படுகிறது. நாள் ஒன்றுக்கு 30 முதல் 40 தென்னைகளில் பதநீர் இறக்குவதால் ஒரு வல்லுநர் சராசரி ரூ. 3 முதல் ரூ. 5 வரை சம்பாதிக்க முடிகிறது. சிரமமில்லாமல் மேற்கொண்டு அதிக மரங்கள் ஏறி, அவருடைய வருவாயை அதிகமாகத் தேடிக்கொள்ள வகை செய்வதற்காக, நஞ்சுண்டாபுரத்திலுள்ள மத்திய தென்னை வெல்ல மாதிரி வழிகாட்டி நிலையத்தில் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக கயிற்றுல் பனை கடக்கும் முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

100 மரங்களில் பதநீர் இறக்க ஏற்பாடு

கயிற்றின் மூலம் தென்னைகளில் சென்று பதநீர் இறக்குவதற்காக 100 தென்னைகள் அடங்கிய தோட்டம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. ஒரு தென்னை மரத்துக்கும் மற்றொன்றுக்கும் இடையே சுமார் 20 அடி தூரம் இருக்கும். இந்த 100 தென்னைகளில் காலையிலும் மாலையிலும், போதகர் திரு. வி. இராமசாமி மிகவும் ஊக்கத்துடன் பதநீர் இறக்கினுர். இந்த ஆண்டில் (1963-ல்) அவருடைய இந்த அரிய சாதனை மூலம், 3 மாத காலத்தில் 100 மரங்களில் 13,851 கிலோகிராம் பதநீர் இறக்க முடிந்தது. ஆனல் சென்ற ஆண்டில் 1962-ல் 36 மரங்களில் 6,747 கிலோகிராம் நீராதான் கிடைத்தது. கயிற்றுப்பால ஏற்பாட்டின் மூலம், 100 தென்னைகளில் பதநீர் இறக்குவதன் காரணமாக ஒரு வல்லுநருக்கு மாதம் ஒன்றுக்கு அவருடைய வருவாயை ரூ. 123 ஆக கூடுதலாக்கிக்கொள்ள முடிகிறது.

புள்ளி விவரம்

மூன்று மாதங்களுக்கு 36 மரங்களில் பதநீர் இறக்க திரு. வி. இராமசாமி செய்த செலவு விவரம் வருமாறு :—

	ரூ.	ந.ப
மாதம் 1-க்கு மரம் ஒன்றுக்கு ரூ. 1 வீதம் 3 மாதங்களுக்கு 36 மரங்களுக்கு குத்தகைத் தொகை ...	108	00
6,747 கிலோ கிராம் பதநீரை வெல்லமாகக் காய்ச்சுவதற்கு விறகுச் செலவு டன் 1-க்கு ரூ. 68-ல் 40 சத விகிதம் ...	184	00
பதநீரைக் காய்ச்ச 3 மாதங்களுக்கு கூலி, (மாதம் 1-க்கு ரூ. 30 வீதம்).	90	00
சுண்ணாம்பு ...	7	00
தேய்மானம் கொப்பரை, கருவிகள், பாத்திரங்கள் ...	10	00
இதர சில்லரைச் செலவு ...	6	00
மொத்தம் ...	405	00

நூறு மரங்களில் பதநீர் இறக்கச் செலவு

(3 மாதங்களுக்கு)

	ரூ.	ந.ப
100 மரங்கள் குத்தகை (மரம் 1-க்கு மாதம் 1-க்கு ரூ. 1 வீதம் 3 மாதங்களுக்கு) ...	300	00
13,851 கிலோ கிராம் பதநீர் காய்ச்ச விறகு (40 சத விகிதம், டன் ஒன்றுக்கு ரூ. 68 வீதம்) ...	376	00
பதநீர் கொண்டுவரக் கூலி மாதம் 1-க்கு ரூ. 30 வீதம் 3 மாதங்களுக்கு	90	00
பதநீர் காய்ச்சக் கூலி மாதம் 1-க்கு ரூ. 30 வீதம் 3 மாதங்களுக்கு ...	90	00
சுண்ணாம்பு ...	15	00
தேய்மானச் செலவு (கொப்பரைகள், பாத்திரங்கள், கருவிகள் முதலியன) ...	20	00
கயிறுகள் (100 மரங்களுக்கு மொத்தம் செலவு ரூ. 400 இவை 3 வருஷங்கள் வரை நீடிக்கும் ஆகையால், 3 மாதங்களுக்கு கயிறுச் செலவு) ...	33	00
இதர சில்லரைச் செலவுகள் ...	16	00
மொத்தம் ...	940	00

வரவு (36 மரங்கள்)

3 மாதங்களில் சேகரிக்கப்பட்ட பதநீர்	... 6,747 கிலோ	
மேற்படி பதநீரிலிருந்து வெல்லம் உற்பத்தி 17 சத விகிதம்	... 1,1 ,, 74	

	ரூ.	ந.ப
1,147 கிலோ வெல்லம் விலை (1 கிலோவுக்கு 75 ந.பை வீதம்).	860	00
செலவு (3 மாதங்களுக்கு) ...	405	00
நிகர வருவாய் (3 மாதங்களுக்கு)...	455	00
நிகர மாத வருவாய் ...	152	00

வரவு (100 மரங்கள்)

மொத்தம் பதநீர் சேகரம் (3 மாதங்களுக்கு)	... 13,851 கிலோ	
வெல்லம் உற்பத்தி 17 சத விகிதம்	2,355 ,,	

	ரூ.	ந.ப
2,355 கிலோ வெல்லம் விலை (1 கிலோ 75 ந.பை வீதம்) ...	1,766	00
மொத்தம் செலவு (மூன்று மாதங்களுக்கு, ...	940	00
3 மாதங்களில் நிகர வருவாய் ...	826	00
நிகர மாத வருவாய் ...	275	00

மேற்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து பதநீர் இறக்கும் வல்லுநரின் வருவாயை மாதம் ஒன்றுக்கு ரூ. 152-லிருந்து ரூ. 275 ஆக அதாவது ரூ. 123 கூடுதலாக்க முடியும் என்று தெளிவாகத் தெரியவருகிறது. இதன் மூலம் அவருடைய குடும்பத்தினர் நல்வாழ்க்கை நடத்த வசதி உண்டாகும்.

பொதுவாக பதநீர் இறக்கும் வல்லுநர்கள் நெஞ்சணைத்தல் அல்லது இடைக்கயிற்றாலோ, கைக்குத்து முறையாலோ தென்னைகளில் ஏறுகின்றனர். இம்முறைகளினால் அவர்களுடைய உடலுக்கு சிரமம் ஏற்படுவதுடன் இல்லாமல் கை, கால்களிலும் வடுக்கள் உண்டாகின்றன. கயிற்றுப் பால முறையைக் கையாண்டால் இந்தக் கஷ்டங்களை நிவர்த்தித்து விடலாம்.

மூன்று மாத காலமும் இப்புதுமுறையைக் கையாண்டதால், திரு. வி. இராமசாமியின் எடை குறையவில்லை. 100 மரங்களில் பதநீர் இறக்கியதால் அவருடைய உடல் நலன் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

வாழ்க்கை வரலாறு

திரு. இராமசாமி, கோயம்புத்தூர் மாவட்டம் கோபிச்செட்டி பாளையம் தாலுகாவிலுள்ள சாணார்பட்டியைச் சேர்ந்தவர். அவருக்கு இப்பொழுது வயது 33, சென்ற 17 ஆண்டுகளாக பதநீர் இறக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார். இந்த நிலையத்தில் போதகராக நியமிக்கப்படும்வரை, நஞ்சுண்டாபுரம் பனை வெல்ல உற்பத்தியாளர் சங்கத்தில் பதநீர் இறக்கும் உறுப்பினராக செயலாற்றி வந்தார். அவருக்கு ஒரு மனைவியும் 3 குழந்தைகளும் உளர். நான்காவது வகுப்பு வரை படித்திருக்கிறார்; தமிழில் நன்றாக வாசிக்கவும், எழுதவும் தெரியும்.

நாட்டுச் செக்கு எண்ணெய்க்கு புத்துயிர் அளிக்கப்படுகிறது

கோவையில் புது ஏற்பாடுகள்

இராமப் பகுதிகளில் செக்காடி நல்லெண்ணெய் எடுப்பது ஒரு முக்கியத் தொழிலாக இருந்தது. நமது நாட்டில் இயந்திரங்கள் புக ஆரம்பித்ததிலிருந்து இத்தொழில் நசுக்கப்பட்டுவிட்டது. காந்தி மகான் இம்மாதிரியான கிராமத் தொழிலுக்கு ஊக்கமளித்தார். அவருடைய கனவை நனவாக்க கதர், கிராமத் தொழில்கள் கழகத்தார் முன்வந்தனர். இதிலிருந்து நாட்டுச் செக்கு எண்ணெய்க்கு மக்களிடையே பற்றுதல் உண்டாயிற்று. நமது புராதனமான இத்தொழிலுக்கு புத்துயிரளிக்கும் தொழிலாளர்களின் வேலைப் பளுவைக் குறைக்க புதிய கருவிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அவர்களுடைய பொருள்களை விற்பனை செய்யவும் வழிகளும் காணப்பட்டு உள்ளன. அவற்றில் விற்பனைத் திட்டமும் ஒன்றாகும்.

சென்ற செப்டம்பர் மாதம் முதல் தேதியன்று (1—9—'63)-ல் கோயம்புத்தூர் நகரில் மூன்று சக்கர வண்டியில் செக்கு எண்ணெய் தெருத் தெருவாக விற்பனை தொடங்கப்பட்டது. தொண்டாமுத்தூர் பஞ்சாயத்து யூனியனிலுள்ள ஒலுசாப்பட்டி எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கத்தின் ஆதரவில் இத்திட்டம் ஆரம்பமாயிற்று. தொண்டாமுத்தூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. திப்பையா தலைமையில் மாவட்டக் கலெக்டர் திரு. ஏ. வெங்கடேசன், ஐ.ஏ.எஸ். குத்துவிளக்கேற்றி வைத்து இவ்விழாவைத் தொடங்கி வைத்தார். கோயமுத்தூர் மாவட்ட கிராமக் கைத்தொழில் அதிகாரி திரு. ஏ. பிச்சை, பி.ஏ. எல்லோரையும் வரவேற்றார். மாவட்டக் கதர்க் குழு உறுப்பினர் திரு. கே. பி. வி. கிரி, செக்கில் ஆட்டப்படும் நல்லெண்ணெய் உடல் நலத்துக்கு உகந்தது என்று கூறினார். புராதனத் தொழிலுக்கு புத்துயிர் அளிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். நல்ல செக்கெண்ணெய் தெருத் தெருவாக விற்பனை செய்யப்படும். இதற்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டுமென்றும் அவர் பேசினார்.

தேசிய இன்னிசையுடன் இவ்விழா முடிவடைந்தது.

உதகையில்

உதகையில், கடலை எண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் மொத்த விற்பனை நிலையம் கடுவெட்டிப்பாளையம், சித்தோடு, பூலவப்பட்டி கூட்டுறவு சங்கங்களின் ஆதரவில் *13—9—'63*-ல் தொடங்கப்பட்டது. இவ்விழாவுக்கு உதகமண்டல நகர சபைத் தலைவர் டாக்டர் பசுவையா, தலைமைவகித்து செக்கு எண்ணெய்க்கு ஆதரவு அளிக்கும்படி மக்களைக் கேட்டுக்கொண்டார். கிராமக் கைத்தொழில்கள் அதிகாரி திரு. ஏ. பிச்சை எல்லோரையும் வரவேற்றார். செக்கு எண்ணெய்த் தொழில் ஆரம்பிக்கப்பட்டதன் அவசியத்தைக் குறித்து விரிவாகப் பேசிய பின்னர் மக்கள் இதற்கு முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும், அளிக்க வேண்டுமெனக் கூறினார்.

நீலகிரிக் கலெக்டர் திரு. எச். எம். சிங், குத்துவிளக்கை ஏற்றி வைத்து இவ்விழாவைத் தொடங்கி வைத்தார். கலப்படமற்ற எண்ணெயை மக்களுக்கு மலிவான விலையில் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்றார். இம் மாவட்டத்தில், எண்ணெய் விலையை ஒரே நிலையாக வைத்திருக்க முயற்சி செய்ய வேண்டுமென்றும் அவர் கூறினார்.

சென்னை கதர், கிராமத் தொழில்கள் கழக உறுப்பினர் திரு. கே. பி. வி. கிரி இவ்விழாவுக்கு வர இயலாமையால் ஆசிச் செய்தி அனுப்பி வைத்திருந்தார்.

தேசிய இசையுடன் விழா முடிவுற்றது.

இதர இடங்களில்

1. ஈரோட்டில் மூன்று சக்கர வண்டி மூலம், செக்கெண்ணெய் விற்பனை 2-10-'63-ல், சித்தோடு எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கத்தால் தொடங்கப்பட்டது.

2. சூலூரில் 4—10—63-ல் சுடம்பாடி எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தால் விற்பனை நிலையம் திறக்கப்பட்டது.

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்—குத்தொக்க சீர்த்த இடத்து

3. தெருக்களில் தள்ளு வண்டி மூலம் கரத்தாடிப்பாளையம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தார் 5-10-'63-ல் செக்கெண்ணெய் விற்பனையைத் தொடங்கினர்கள்.

4. சிறுவலூர் எண்ணெய் உற்பத்தியாளர் சங்கம், கவண்டப்பாடியில் 6—10—'63-ல் விற்பனை நிலையத்தைத் தொடங்கியது.

5. காங்கயம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் ஆதரவில், 7—10—63-ல் மாட்டு வண்டியில் எண்ணெய் வாணிபம் ஆரம்பமாகியது.

6. தாராபுரத்தில் 9—10—'63-ல் செக்கெண்ணெய் நிலையத்தை சென்னக்காவல்வலசு எண்ணெய் உற்பத்தியாளர் சங்கத்தார் தொடங்கி வைத்தனர்.

7. சென்ற 9—10—'63-ல் அறுப்பர் பாளையத்தில், அவிஞசி எண்ணெய் உற்பத்தியாளர் சங்கத்தார் செக்கெண்ணெய் விற்பனை நிலையத்தை ஆரம்பித்து வைத்தனர்.

8. ஆளம்பாளையம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தினர், 14—10—'63-ல் குன்னத்தூரில் செக்கெண்ணெய் விற்பனை நிலையத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

வெல்லக் கட்டுப்பாட்டுச் சட்டமும் பனைவெல்லப் போக்குவரத்தும்

இந்திய அரசாங்கத்தின் வெல்லக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் பனைவெல்லத்தை மாநிலங்களிடையே கொண்டு செல்ல அனுமதி அளிக்கப்படவில்லை என்ற பல புகார்கள் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து வந்தன. அதன்பேரில் மாநில சம்மேளனம் நடவடிக்கை எடுத்ததன் பயனாக மேற்கண்ட கந்தசாரி வெல்லக் கட்டுப்பாட்டுச் சட்டம் பனைவெல்லப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தாது, என அரசினர் அறிவித்துள்ளனர். எனவே பனைவெல்ல உற்பத்தியாளர்கள், மாநிலங்களிடையே வழக்கம்போல் பனைவெல்ல வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தலாம்.

பனைத் தொழில் வல்லுநர் வாழ்க்கை நிலை

சென்னை மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனக் காரியதரிசி அவர்கள் 12—10—'63-ல் தவத்திரு குன்றக்குடி அடிகளாருடன் Q 43ம கீழாயப்பட்டி ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத்தைப் பார்வையிட்டார்கள். இராமநாதபுரம் மாவட்டக் கிராமக் கைத்தொழில் அதிகாரி திரு. T. கோவிந்தராஜுலு, B.A., அவர்களும், இராமநாதபுரம்—மதுரை மாவட்டப் பனைவெல்ல விற்பனைக் கூட்டுறவுச் சம்மேளனக் காரியதரிசி திரு. பாலகிருஷ்ணன் அவர்களும் உடன் வந்திருந்தனர். மேற்படி சங்கத்தில் 151 உறுப்பினர்கள் ஆரம்பத்தில் இருந்தனர். தற்போது 40 பேரே உள்ளனர். இதில் செலுத்தி வைக்கப்பட்டுள்ள பங்குத் தொகை ரூ. 269 ஆகும் 1962-ல் பனையேறுவதற்கு 29 அனுமதிச் சீட்டுகளும், பதநீர் விற்பனைக்கு 33 அனுமதிச் சீட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன. 1963-ம் ஆண்டு முறையே 6 அனுமதிச் சீட்டுகளும், 9 அனுமதிச் சீட்டுகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

இக்கிராமத்தைச் சுற்றிலும் ஏராளமான புறம்போக்குப் பனைகள் உள்ளன. கிராமத்துக்குச் சொந்தமான பனை மரங்களைப் பனைத் தொழில் வல்லுநர்களுக்கு இலவசமாகக் கொடுக்க ஊராட்சி மன்றத்தார் தடையேதும் விதிக்கவில்லை. ஒரு நபர் 10 மரம் வரை இலவசமாகப் பெற முடிகிறது. இதற்காகக் குத்தகைப் பணமோ, வாரமோ செலுத்தவேண்டியதில்லை.

மரங்களில் மாசி மாதம் கலயம் கட்டுகிறார்கள். தை மாதம் கோடைப் பாளை சீவப்படுகிறது. ஆண் மரத்தில் விரல் வந்த பின்னரே பாளை சீவுகின்றனர். இங்குள்ள வல்லுநர்களுக்குக் 'கட்டறுப்பு முறை' தெரிந்தபோதிலும் அதை அவ்வளவாகப் பின்பற்றுவதில்லை. ஒரு மரம் சராசரி 3 படி பதநீர் கொடுக்கிறது. மூன்று மாதம் பனையேற்றுப் பருவம் உள்ளது. எனவே ஒரு வல்லுநர் தனக்கு இலவசமாகக் கொடுக்கப்படும் 10 மரங்களிலிருந்தும் நாள் ஒன்றுக்கு சராசரியாக 30 படி வீதம் 90 நாட்களுக்கு 2,700 படி பதநீர் சேர்க்கிறார். குத்தகைக்கு மரம் வாங்கும் முறையைப் பின்பற்றாததால் 10 மரங்களுக்குமேல் ஏறுவதில்லையாம்! பதநீரை படி ஒன்றுக்கு 25 காசு வீதம் விற்பதன் மூலம் ஒரு பெண் ஒரு நாளைக்கு 10 படி வரை விற்பதாகவும், இதனால் நிகர வருமானமாக ரூ. 1—50 முதல ரூ. 1—75 வரை கிடைப்பதாகவும் கூறினார்கள். மது விலக்கிற்கு முன் இவர்கள் கள்ளிறக்கியதால் பனைவெல்லாம் காய்ச்சும் முறை தெரியாதவர்களாக இருந்தனர். இங்கு காவல் துறையினரின் தொல்லை இல்லாததால் பதநீரை நாணயமான முறையில் பதநீராகவே விற்கின்றனர்.

ஒரு முதுமையான பனைவெல்ல உற்பத்தியாளரிடம் மாநில சம்மேளனக் காரியதரிசி அவர்கள் பல தகவல்களைக் கேட்டு, அங்குள்ள நிலையை அறிந்து கொண்டார்கள். அவர் கூறிய தகவல்களிலிருந்து சில உண்மை நிலை புலனாயிற்று.

பண்டமாற்று முறையில் விற்ற பனை

ஒருவர் ஒரு மரத்தில் மூன்று வேளை ஏறி இறங்கிப் பாளை சீவ வேண்டியதுள்ளது. எல்லா மரங்களிலும் ஒரே சமயத்தில் பாளை வருவதில்லை. எனவே ஒருவர் சராசரியாகத் தினம் 10 முதல் 15 படிப் பதநீர் இறக்குகிறார். ஒரு நபர் இறக்கும் பதநீரை விற்க இரண்டு பேர்கள் வேண்டியதுள்ளது. ஒவ்வொரு பனைவெல்ல உற்பத்தியாளருக்கும் சொந்தமாக ஏதோ கொஞ்சம் நிலம் உள்ளது. இதனால் விவசாய வருமானமும் குறைவு. எனவே இரண்டு தொழிலையும் மேற்கொண்டு ஜீவனம் செய்கின்றனர். பதநீர் விற்பனை பண்டமாற்று முறையிலேயே நடைபெறுகிறது. அவ்வப்போது கிடைக்கும் விவசாயப் பொருளைக் கொடுத்து, அதற்கு ஈடான அளவு பதநீரை வாங்கிப் பருகுகின்றனர். இதனால் பண நடமாட்டம் மந்தமாகவே உள்ளது. வீதிகளில் பெண்கள் பதநீர் விற்பனை செய்வதை இவர்கள் விரும்பவில்லை. மேலும் இத்தொழிலைச் சிறுவர்கள் கற்க முன் வருவதில்லை எனவும் கூறினார்கள். ஒவ்வொருவருக்கும் சொந்தமாக சிறு வீடு உள்ளது. இவர்களில்

இரண்டு பேருக்கு மட்டுமே சிறிய காரை வீடு உள்ளது. எஞ்சியோர் குடிசைகளில் தான் வாழ்கின்றனர். பெண்கள் பெட்டி முடைகின்றனர்.

அதிகாரம், கம்பலம், தம்பிபட்டி, கொரட்டித்தட்டி, முதலிய ஊர்களில் பனை யேற்றுத் தொழில் புரிய விருப்பமுடையவர்கள் மொத்தம் 12 பேரே உள்ளனர், இவ் வட்டாரத்தில் உள்ள பனைத்தொழில் வல்லுநர்களில் சுமார் 50 பேருக்கு வீடும், நிலமும் கிடையாது. இப்பகுதியில் உள்ள 16 ஏரிக் கரைகளிலும் பனை மரங்கள் உள்ளன. சிராவயல், தட்டட்டி ஆகிய பஞ்சாயத்துக்குச் சொந்தமான பனைகளும் உள்ளன. இவைகள் அனைத்தையும் இப்பகுதி வாழ் பனைத் தொழில் வல்லுநர்களைக் கொண்டு பயன் படுத்த வேண்டுமென்று தவத்திரு குன்றக் குடி அடிகளார் பெரிதும் விரும்புகின்றார். அவர்களுடைய ஆர்வத்தால் பனைத்தொழில் சிறப்புறும் என்பதில் ஐயமில்லை.

மாணவிகளிடையே நமது தொழில்

அன்று பிற்பகல் 6-30 மணிக்கு தவத் திரு குன்றக்குடி அடிகளாரின் ஆசிரியர் பயிற்சிப் பாடசாலை மாணவிகள் ஒரு விருந்து கொடுத்து, கலா நிகழ்ச்சிகளும் நடத்திக் காட்டினர். ஒவ்வொரு ஓரங்க நாடகமும் கருத்துச் செறிவுடையதாக இருந்தது. கிழாயப்பட்டி கிராமத்தில் மேற்படி பயிற்சிப் பள்ளி மாணவிகள் ஒரு வார காலமாகத் தங்கியிருந்து குடிமைப் பயிற்சி பெற்ற விவரத்தையும், கிராமப் பொருளாதார நிலையையும் பின்னிப் பிணைத்து சுவையான நாடகங்களாக நடித்துக் காட்டினர்.

மாணவிகளிடையே உரை நிகழ்த்திய மாநில சம்மேளனக் காரியதரிசி அவர்கள் பனைத்தொழில் பற்றிய நாடகம் ஒன்றையும் இனி இவ்வித நிகழ்ச்சிகளுடன் இணைத்துக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள். பனைத்தொழில் நாடகங்களை இனி மாணவிகள் நடித்துக் காட்டுவார்களென தவத்திரு அடிகளார் கூறினார்கள்.

மாணவிகளிடையே பேசிய காரியதரிசி அவர்கள் பனைப் பொருட்களை உபயோகிப்பதைப் பெண்கள் ஆதரிக்க வேண்டு மென்றும், பிறந்தவுடன் குழந்தைகளுக்கு செயற்கை உணவைப் புகட்டுவதை விடுத்துப் பனைவெல்லம், பனங்கற்கண்டு முதலியனவற்றை உபயோகிக்க வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டார்கள். பனைத் தொழில் பற்றி விரிவான சொற்பொழிவு நிகழ்த்திய காரியதரிசி அவர்களைத் தவத் திரு அடிகளார் பாராட்டினர்.

விற்பனைக்குத் தயார்

பனைத் தொழில்	...	ரூ. 3—50
இனிக்கும் பதநீர்	...	ரூ. 0—50

திரு. கே. சம்பந்தம் அவர்கள் எழுதியுள்ள மேற்கண்ட இருநூல்களும் சேலத்தில் நடைபெறவிருக்கும் மூன்றாவது மாநில மாநாட்டில் விற்பனை செய்யப்படும். பனைத் தொழில் இசைத் தட்டுகளும் கிடைக்கும்.

வெளியிடுவோர் :

சென்னை மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்

66, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-17.

புதிய கண்டுபிடிப்புக்களின் பொறுப்பாளர்கள்

மரம் ஏறும் கருவி:

(1)	ஸ்பிரிங் அமைப்புடைய பனையேறும் கருவி ...	நாகர்கோயில் திரு. ஜீ. ஏ. டேனியல்
(2)	புல்லி முறையில் உருவாக்கப்பட்ட கருவி ...	திரு. சாக்சேனு (உத்திரப்பிரதேசம்)
(3)	இரும்பு கயிற்றை மரத்தில் இணைத்து ஏறும் முறை ...	தகனூ ஆராய்ச்சி நிலையம்

பாளை சீவுதல்:

(4)	வாக்குவம் டாப்பிங் ...	டாக்டர் சௌத்ரி (பம்பாய்)

சுண்ணாம்புக்குப் பதில்:

(5)	சல்பனுமைட் உபயோகித்தல் ...	திரு. டி. ஜீ. வாலவாக்கர் (தகனூ)
(6)	பாலூட்ரின் ,, ...	பேராசிரியர் பீ. எஸ். சர்மா
(7)	அரோமைசின் ,, ...	திரு. ஜீ. ஏ. டேனியல்
(8)	சிலிக்காஜெல் ,, ...	திரு. என். கோபிநாதன்

இறக்கியபின் பதநீர் புளிப்படைவதைத் தடுத்தல்:

(9)	பதநீரை 44 F-க்கு குளிரவைத்தும் பாதுகாத்தல் ...	திரு. வி. கே. மூர்த்தி
(10)	திடீர்க் குளிர்விப்பு முறை ...	திரு. கே. ஜி. கைமால்
(11)	கொதிக்கவைத்துத் திடீரெனக் குளிர்வித்தல்.	திரு. வி. சீனிவாசன்
(12)	பதநீரைப் பனிக்கட்டியாக மாற்றுதல் ..	திரு. ஜீ. ஏ. டேனியல்

பதநீரைத் தெளிவித்தல்:

(13)	சூப்பர்பாஸ்பேட் அல்லது பாஸ்பாரிக் அமிலம் சேர்த்துப் பத நீரைக் காய்ச்சிச் சுண்ணாம்பைப் பிரிக்கும் முறை ...	திரு. என். கோபிநாதன்

நவீன அடுப்புக்கள்:

(14)	சலாமத், கிவாயத் அடுப்பு ...	திரு. பீ. சி. ஜோஷி
(15)	மூவித் அடுப்பு ...	திரு. ஆர். எம். ஜோஷி
(16)	பிலிம் எவாபரேட்டர் ...	தகனூ ஆராய்ச்சிக்கூடம்

ஓலை களைதல்:

(17)	கணிசமான அளவு ஓலை களைவதால் பதநீர்ச் சுரப்பு அதிகரிக்கிறது என்ற அனுபவ உண்மையை ஆராய்ந்து நிருபித்தவர் ...	திரு. என். கோபிநாதன்
(18)	பனஞ்சீனி உற்பத்தி செய்யும் கருவி ...	தகனூ ஆராய்ச்சி நிலையம்.

பனங்கற்கண்டு:

(19)	கற்கண்டுப் படிகத் தொட்டி ...	திரு. கே. சம்பந்தம்

நவீன அச்சுகள்:

(20)	மண் அச்சு ...	திரு. கே. சம்பந்தம்

பதநீரின் சத்துணவு:

(21)	பதநீரைப் பாடசாலைக் குழந்தைகளுக்குக் கொடுத்து ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவர் ...	டாக்டர் பான்சே

குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும் நாணின்மை நின்றக் கடை

பனை ஓலை, ஈர்க்குகள்

பனை மரத்தின் ஒவ்வொரு பாகமும் எவ்விதத்தாலும் ஒவ்வொரு மனிதனுக்கும் பயன்படுகிறது. பனை ஓலை அழகான கூடைகள், பைகள் முதலியன முடைவதற்குப் பயன்படுகின்றன, அதேபோல அதன் ஈர்க்கும் உபயோகமாகிறது. தென் இந்தியாவில் முக்கியமாக சென்னை மாநிலத்தில் பதநீர் இறக்கும் தொழிலாளர் குடும்பங்களே இத் தொழிலில் நீண்டகாலமாக ஈடுபட்டுள்ளனர்.

ஓலைத் தொழில் மறுபடியும் புதுப்பிக்கப் பட்டு இக்காலத்திற்கேற்றவாறு கூடைகள், பைகள், பெட்டிகள் முடையப்படுகின்றன. இப்பொருட்களுக்கு நம் நாட்டிலும் வெளி நாடுகளிலும் விற்பனைக்குரிய சந்தை ஏற்பட்டுள்ளது.

சாதாரண முதலீட்டுடன் ஒரு தொழிலாளர் இத்தொழிலை மேற்கொண்டால், அவருடைய குடும்பத்திற்கு நிரந்தரமான வருவாய் கிடைக்கும்; அத்துடன் பதநீர் பருவ காலத்திலும் அவருக்குக் கூடுதலான வருவாய் கிடைக்கும்.

ஈந்தப் பனந்தும்பு :—ஈந்தப் பனை ஓலையிலிருந்து தும்பு எடுக்கப்படுகிறது. மட்டையிலிருந்து ஓலைகளை வெட்டி தண்ணீரில் நினைத்து தும்பைப் பிரித்து எடுப்பதற்காக ஒரு இயந்திரத்தில் வைக்கப்படும். தும்பு தனியாகப் பிரிக்கப்பட்டபின் உலர வைத்து சாயம் ஏற்றப்படுகிறது. வாசல் திரைகள், அழுக்கைப் போக்கும் மிதியடிகள், கட்டில்களுக்கு தேவையான நாடாக்கள் ஆகியவை பின்னுவதற்கு நூலாகத் திரிக்கப்படுகின்றது. தேவைப்பட்டால் சாயம் ஏற்றாமலே தும்பை பரும் கயிறுகளாகத் திரிக்கின்றனர்.

இந்த ஓலைகளிலிருந்து கிழித்து எடுக்கப்படும் ஈர்க்குகளைப் பதப்படுத்தினால் 'சிக்குகள்' பின்ன உபயோகமாக இருக்கும். மேற்கொண்டும் ஓலையின் அடிபாகத்திலிருந்து தும்பைப் பிரித்து எடுக்கலாம்.

பதநீர் இறக்குமுன்னர், ஓலைகளை வெட்டிச் சேமித்து வைத்திருந்தால், பருவ காலமற்ற காலத்தில் அவற்றிலிருந்து தும்பு எடுக்கலாம். ஒவ்வொரு ஈந்தப் பனையிலிருந்து சராசரி 20 ஓலைகள் கிடைக்கும். இன்னும் இதர சாமான்களும் செய்ய இந்த ஓலைகள் பயன்படும்.

பருவம் முடிந்தபின் தொழிலாளர் ஆண் (ரூ. 2), பெண் (ரூ. 1) ஆகிய இருவரும் சேர்ந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 90 சம்பாதிக்கலாம்.

எந்த சங்கமோ அல்லது கழகமோ விரும்பினால் ரூ. 3,000 மூலதனத்துடன் இத் தொழிலைத் தொடங்கி நடத்தலாம்.

நார்

பனை மட்டையிலிருந்து உரிக்கப்பட்ட தோலுக்கும், அதன் உள்ளிருக்கும் தோலுக்கும் 'நார்' என்று பெயர். 'நார்' என்பது தமிழ்ப் பெயர். மட்டைக்குள்ளிருப்பது 'அகணி நார்' எனப்படும்; வெளியிலுள்ள பட்டை நாருக்கு 'புறக்கணி நார்' எனப்படும்.

கத்தியால் இந்த நார்கள் கிழிக்கப் படுகின்றன. இவ்விதமாகக் கிழிக்கப்பட்ட நார்கள் பதப்படுத்தப்பட்ட பின்னர், கட்டில்கள், நாற்காலிகள் ஆகியவற்றைப் பின்னுவதற்கு உபயோகப் படுகின்றன. கூடைகளும் முடையப் படுகின்றன. இவை சென்னை மாநிலத்தில் நெடுங்காலமாக நடைபெற்று வருகின்றன. நார்களைச் சுத்தப் படுத்தும்போது ஏற்படும் கழிவு நார்களை சாயத்தில் தோய்த்து வாயில்களுக்குத் தேவையான பாய்கள், கயிறுகள் பின்னப் படுகின்றன; இவை ஈந்தப் பனைத் தும்பிலிருந்து செய்யப் படுகின்றன.

இத்தொழிலுக்குச் சாதாரண முதலீடு தேவை. ஒவ்வொரு தொழிலாளரும் நாள் ஒன்றுக்கு ரூ. 2 முதல் ரூ. 3 வரை சம்பாதிக்கலாம்.

கீழ்க்கண்ட மாநிலங்களில் பனைவெல்ல வளர்ச்சித் திட்டங்கள் செயல் முறையில் இயங்கி வருகின்றன.

(1) ஆந்திரா, (2) அஸ்ஸாம், (3) பீகார், (4) மகாராஷ்டிரா, (5) மத்தியப் பிரதேசம், (6) சென்னை, (தமிழ் நாடு) (7) மைசூர், (8) ஒரிஸா, (9) ராஜஸ்தான், (10) கேரளா, (11) உத்தரப்பிரதேசம், (12) மே. வங்காளம், (13) பஞ்சாப், (14) ஜம்மு-காஷ்மீர்.

இது தவிர, மணிப்பூர், புதுச்சேரி ஆகிய பகுதிகளிலும் பனைவெல்ல அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றபட்டு வருகின்றன.

பதநீர் இறக்கக்கூடிய எல்லா மரங்களையும் (8 கோடி மரங்களையும்), பனை வெல்லம், சீனி போன்ற பொருள்களை உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்டால், நாட்டிற்கு மிகவும் நன்மையே.

தொழிலின் வளம்

இன்றைய நிலையில் இந்தத் தொழில் வளம் பற்றிய விவரம் கீழே தரப்படுகிறது.

	தற்சமயம்	வருங்காலம் இலட்சம்
(1) பனைவெல்ல உற்பத்தி (டன்கள்) ...	75.000	15
(2) வேலை வாய்ப்பு ...	3,06,000	25
(3) நன்செய் நிலங்கள் மீட்சி (ஏகராக்கள்).	53,000	10

பனைவெல்ல உற்பத்தி தவிர, 8 கோடி பனை மரங்களின் பல பகுதிகளையும் தேவைப் பொருள்களுக்கு பயன்படுத்தலாம்; இதனால் உற்பத்தி பெருகுவதுடன் அதிக வேலை வாய்ப்புக்கும் இடமளிக்கும். இத்தொழில் வறுமையை ஒழிப்பதற்கு ஒரு மாற்றாக அமையும்.

செயற்கைக் கண்கள்

மேற்கு ஜெர்மனியிலுள்ள கீல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் மனிதர்களுக்குப் பயன்படக்கூடிய கண்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளார். எருதுகளின் கண்களிலுள்ள ஜெல்லி லென்சுகளை நீக்கி உலரவைத்து, அவைகளைப் பொடி (Powder) யாக்கி கண் லென்சுகளைத் தயாரிக்கிறார். இவர் சென்ற நாற்பது வருடங்களாகவே இவ்வாராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வெற்றிகண்டுள்ளார்.

டெஸ்ட் டியூப்கள் (சோதனைக் குழாய்), எர்லேமியர் பிளாஸ்க், புன்சென் பர்னர் ஆகியவைகளைக் கொண்டு இவர் செயற்கைத் திசுக்களையும் தயாரித்து வருகிறார். மேலும் எலும்பு, பற்கள் முதலியவைகளும் செயற்கை முறையில் தயாரிக்கப்படுகிறது. இவை அனுபவ பூர்வமாகப் பயன்பட சில காலம் ஆகும். எனினும் இது வைத்தியத் துறையில் மாபெரும் சாதனையாகும்.

பனைவெல்ல உற்பத்திக் குறியீட்டளவு

வரிசை எண்	மாவட்டத்தின் பெயர்		1962—63-ல் உற்பத்தி (கிலோ)	1963—64-ல் குறியீட்டளவு (கிலோ)	1962—63-ல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை (கிலோ)	1963—64-ல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப் பட வேண்டிய குறியீட்டளவு (கிலோ)
(1)	கன்னியாகுமரி	...	7,79,395	8,00,000	7,79,400	7,00,000
(2)	திருநெல்வேலி	...	33,94,534	35,00,000	6,73,110	22,50,000
(3)	இராமநாதபுரம்	...	30,40,663	30,50,000	2,41,393	5,00,000
(4)	மதுரை	...	11,10,635	12,00,000	40,196	2,00,000
(5)	திருச்சிராப்பள்ளி	...	13,78,025	14,00,000	13,72,500	7,00,000
(6)	கோயம்புத்தூர்	...	1,05,67,337	1,10,00,000	63,84,387	80,00,000
(7)	சேலம்	...	78,55,000	79,25,000	11,16,737	25,00,000
(8)	வட ஆற்காடு	...	58,075	60,000	8,177	15,000
(9)	தென்னாற்காடு	...	2,72,186	2,75,000	6,000	50,000
(10)	தஞ்சாவூர்	...	1,10,253	1,20,000	5,670	15,000
(11)	செங்கற்பட்டு	...	1,38,972	14,0,000	1,37,577	70,000

நாம் ஏன் அஞ்சவேண்டும்?

மாங்குடி-என். சி. எஸ்.

காட்சி 1

இடம் : சின்னத்தம்பியின் ஓட்டைக் குடிசை.

உறுப்பினர்கள் : கண்ணம்மாள், சின்னத்தம்பி.

காலம் : மாலே.

[சின்னத்தம்பி தன்னுடைய குடிசைக்கு வெளியே அமர்ந்து பனங்காய் களைச் சீவி ஆட்டுக் குட்டிக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் மனைவி கண்ணம்மாள் தொட்டிலில் அழுதவண்ணம் இருக்கும் குழந்தையைத் தாலாட்டி உறங்க வைக்க முயற்சிக்கிறார். அடுப்பிலிருந்து புகை மண்டுகிறது. பாவம், அவளென்ன செய்வாள் !]

சின்னத்தம்பி : ஏய், என்ன இது? கண்ணு முளிக்க முடியாமெ புகை மூட்டம் போடுறியா ?

கண்ணம்மா : நான் என்ன செய்றது? அடுப்பெ பார்க்கிறதா? தொட்டிலே ஆட்டுறதா? உங்க செல்லப் பிள்ளெ தூங்க மாட்டேங்கறதே !

சின்னத்தம்பி : சே! சே! பெரிய தர்ம சங்கடமாப் போச்சுது? வர வர நீயும் எதுத்துப் பேச ஆரம்பிச்சுட்டெ !

கண்ணம்மா : எனக்கு ரெண்டு காலும், ரெண்டு கையுந்தானே இருக்கிறது! நாலாள் வேலேயெ எப்படி பார்க்க முடியும்? தோப்புக்குப் போனு நான்தான் பதநீர் காச்சணும்! இங்கெ வந்தால் நான்தான் கஞ்சும் காச்சணும் !! எல்லாம் எங்க அம்மா செய்த வேலேயாலெ வந்த வினே (தேம்பி அழுகிருள்) இல்லேன்னு இப்படியா சங்கடப்படுவேன்! நல்ல எடமா பார்த்துக் கொடுத்திருந்தா நான் நல்லா இருந்திருப்பேன்.

சின்னத்தம்பி : அழாதே கண்ணம்மா. நம்ம பொழப்புக்காகத் தானே கஷ்டப்படுறேம்! நமக்குன்னு நாலு மரக்கா நெலமோ, நாலு தோப்போ இல்லேயே! வீட்டுக்கு ஒரு வாசல் தப்பாமெ இருக்கிறப்போல நமக்கு இந்த மாதிரி சங்கடம் ! என்ன செய்றது ?

கண்ணம்மா : போதும்! இந்தத் தொழிலே வுட்டுப்புட்டு நாலு மாடு வாங்கி, தோட்ட வேலே கீட்டவேலெ பார்த்தாலாவது கஞ்சுக்குப் பஞ்சமிருக்காது! நாலு காசும் மிஞ்சும்!-அடுத்தவங்களெ கெஞ்ச வேண்டியதில்லே !

சின்னத்தம்பி : இக்கரைக்கு அக்கரை பச்சை தான் ! விவசாயத்திலே மட்டும் கஷ்டமில்லியா? அதுவும் மானம் பாத்த பொழப்புதானே! ஏதோ, நம்ப தொழிலேத் திருப்தியா செய்வோம்! அப்புறம் ஆண்டவன் விட்ட வழி !

கண்ணம்மா : இந்தப் பங்குனிப் பொங்கலுக்காவது கடனே உடனே வாங்கி துணி மணி எடுங்க. நல்லது பொல்லது இல்லாமெ எத்தனே நாளேக்கு இருக்கிறது.

சின்னத்தம்பி : கடன் வாங்கவேண்டாம்பியே! இப்போ என்ன......

கண்ணம்மா : புதுசா ஒண்ணும் இல்லே! உடுத்துற சேலேயை விட்டா வேறெ கதி இல்லே! நம்ப நெலமை ரொம்ப கேவலமாய் போச்சுது! அதுனலே தான் சொன்னேன் !......ஏதோ அன்னிக்கு ஒரு நாளேக்காவது நாக்குக்கு ருசியா ஏதாவது சாப்பிடாமே வேறெ எண்ணேக்குச் சாப்பிடப் போறேம் ?

[அப்போது சொக்கலிங்கம் வருகிறார். அவரைக் கண்டதும் எழும்பி நின்று தலே வணங்குகிருன், சின்னத்தம்பி.]

சொக்கலிங்கம் : ஹி ஹி ஹி...கும்புடு பலமா இருக்கே !

சின்னத்தம்பி : ஐயாவே இன்னிக்கு இந்தப் பக்கமா...

சொக்கலிங்கம்: வரக்கூடாதா ?

சின்னத்தம்பி: (தலையைச் சொறிந்து கொண்டே) அப்படி இல்லீங்க!

சொக்கலிங்கம்: சரி, சரி! ஏன் இந்த வாரம் கருப்பட்டியைக் கொண்டு வந்து போடலெ!

சின்னத்தம்பி: நம்ம சின்னப்பிள்ளைக்கு கொஞ்சம் சொகமில்லே... அதிஞலே வைத்தியர் சொன்ன மருந்து வாங்க......

சொக்கலிங்கம்: உன் பிள்ளைக்குச் சுகமில்லேன்ஞ எனக்கு என்ன? வாங்கின பணத்துக்கு நாமஞ் சாத்திடலாமின்னு பாக்கிறியா?

சின்னத்தம்பி: இல்லீங்க! என்னை அடகு வச்சாவது பணத்தைக் கட்டிடுறேன்!

சொக்கலிங்கம்: அதெல்லாம் எனக்குத் தெரியாது; போன வாரக் கருப்பட்டி நம்ப மண்டிக்கு வந்தாகணும்......வெலக்கி வாங்கிக் குடுப்பியோ, வேறே எப்படி சமாளிப்பியோ தெரியாது!

[கடுகடுத்த குரலில் சொல்லிவிட்டுச் சொக்கலிங்கம் நகர்ந்து விடுகிருர். கண்ணம்மா கண்கலங்கி நிற்கிருள். அமைதி நிலவுகிறது.........மன வேதனையோடு பனங்காய் சீவிக் கொண்டிருந்த சின்னத்தம்பியின் கரத்தில் அரிவாள் பதிகிறது...]

கண்ணம்மா: அய்யோ...[மயங்கி விழுகிருள். குழந்தை வீறிட்டு அலறுகிறது]

சின்னத்தம்பி: [மனக்குரல்] கேவலம்! இந்த ரத்தத்துக்காகத் தான் கடன் வாங்கிச் சாப்பிடுகிருேம்!. உடல் நோவ வேலே செய்கிருேம்! அதுவும் கூட இப்படி மண்ணேடு மண்ணுய் போயிடுது! சே! சே! [கருப்பட்டியில் எறும்புகள் ஊறுகின்றன. அதைப் பார்த்த வண்ணம்] கேவலம் இந்தச் சிறு ஜீவனுக்கு உள்ள உரிமைகூட நமக்கு இல்லியே! அது யாரைக் கேட்டு, எந்த விலே கொடுத்து இந்த உணவைத் தின்றது?

[தெருவில் இரண்டு பேர் பேசிக் கொள்ளும் குரல் சின்னத்தம்பியின் காதில் விழுகிறது.]

ஒருவர்: வாண்ணே வா,......திண்டுக்கல் போனியாமே!

மற்றவர்: ஆமா! எல்லா எடத்துக்குந்தான் போனேன்...(மெதுவாக) இந்த வருஷம் கருப்பட்டி விலே எக்கச்சக்கமா ஏறும் போலிருக்கு .....எப்படியும் அவனை இவனை வளேச்சுப்போட்டாவது ஒரு பத்தாயிரங் கொட்டானுவது ஸ்டாக் பண்ணணும்......ஜில்லா பெடரேஷன் காரங்க தலேயிட்டாங்கன்னு நம்ப அதிக லாபம் பார்க்க முடியாது.

[சின்னத்தம்பி நிமிர்ந்து பார்க்கிருன். குரல் கேட்கவில்லே. கண்ணம்மா தெளிவடைகிருள்.]

சின்னத்தம்பி: கண்ணம்மா! [அவள் எழும்புகிருள்.]

காட்சி 2

இடம்: தெரு

உறுப்பினர்கள்: இரண்டு பனைத் தொழில் வல்லுநர்கள், சின்னத்தம்பி.

காலம்: கோழி கூவும் வேளே.

[மூன்று பேரும் காவட்டைச் சுமந்த வண்ணம் தோப்புக்குப் போகின்றனர். காட்டுப் பாதை. இருட்டான கருக்கல் வேளேயில் பாம்பு போன்றவைகள் நடமாடும். என்ருலும் தினமும் நடந்து பழக்கப்பட்ட பாதையாகையால் பயமின்றி செல்லுகின்றனர்.]

ஒருவன்: என்னண்ணே, நாளேக்கு நம்ப சங்கத்திலே ஏதோ கூட்டம் போட்டிருக்கதா தலேவர் சொன்னுறு...

சின்னத்தம்பி: கூட்டம் போடுறதுல என்ன குறைச்சல்......நம்ப பனேயை நம்ம தானப்பா ஏறணும்...கூட்டம் ஆட்டமெல்லாம் வெள்ளே வேட்டிக்காரங்களுக்குத்தான் இலாயக்கு.

மற்றவன்: இப்படியே இராமர் வனவாசம் பண்ணினமாதிரி ஊரெவுட்டு எத்தனே நாளேக்குத் தான் ஒதுங்கி இருக்கிறது? எண்ணேக்குத்தான் முன்னேறுறது? அதையாவது சொல்லேன்?

சின்னத்தம்பி: (சிரித்துக்கொண்டே) எல்லாரும் முன்னேறுருங்க... நம்ப ஒயர ஏறுரோமே!... அதுபோதாதா? மேல்காத்து அடிக்கிற நேரத்திலே பனைமரம் நம்மை தாலாட்டுது!... இந்தா பாரு, இந்த வம்பெல்லாம் நமக்கு வேண்டாம்...... என்னமோ பனை ஏறுறதுக்குன்னே பொறந்துட்டோம்! இந்தக் காய்ப்பை பையும், வெட்டுக் காயத்தையும் காட்றதுக்காக நாமெ கூட்டம், திருவிழா முதலியவைகளுக்குப் போறது நல்லா இல்லெ? நம்ப கூட்டத்துக்கு இந்த ஒடம்போட போறதுன்னு கூச்சமில்லாமலா இருக்கும்! என்னமோ நம்ப எல்லாம் காட்டிலெ வாழ்ற ஜனங்களாட்டமா மத்தவங்க நெனக்கிருங்க! நெஞ்சிலே இருக்க காய்ப்பை மறைக்க ஒரு முழத் துண்டுக்குக்கூட விதியில்லாதவங்க நாம்! அப்படியே மறைச்சாலும் மரத்துப்போன முரட்டுக்கைகள் நாம் யாருன்னு காட்டிக் கொடுத்துடும் கீழத்தெரு சுப்பம்மா — ஒனக்குத் தெரியுமா?

ஒருவன்: ஓ! தெரியுமே! அவா அந்தக் காலத்திலே தோசை, பணியாரம் சுட்டு வித்துகிட்டிருந்தா. இப்போ அவா மகன்கூட பன்னண்டாம் வகுப்பு படிக்கருனும்!

மற்றவன்: பன்னண்டாம் வகுப்பா? ஆம்! பெரிய படிப்புக்குக்கூட அனுப்பிட்டாளா? கெட்டிக்காரிதான்......ஆப்பம் சுட்டு விக்கிறதும், தோசை சுடுறதும் கேவலமின்னு நெனக்காம செய்ததிஞலே இவ்வளவாவது நல்லா இருக்கா.

சின்னதம்பி: படிக்கட்டும்; நல்லதுதான்; வேண்டான்னு சொல்லல்லே! நேத்து கோடித் தெரு குப்பன் கடையிலே பீடி வாங்கறப்போ பார்த்தேன். அவன் என்னமோ ரெண்டு இங்கிலீசும், தமிழுமா பேசிக்கிட்டு, நம்ப பஞ்சாயத்து போர்டு மெம்பர்ட்டே என்னைக் காட்டிக் கிட்டு, இந்த இருபதாம் நூற்றுண்டிலே இப்படி அநாகரிகமா இருக்கிறதெ பார்க்க ரொம்ப கேவலமா இருக்குதுங்கிருன்.

மற்றவன்: மெம்பர் ஒண்ணுஞ் சொல்லல்லியா?

சின்னதம்பி: என்ன சொல்லுவாரு? சிரிச்சிக்கிட்டாரு. அவ்வளவுதான். நமக்காக யாரு அனுதாபப் படப்போறது? ஒரு வருந்தான இல்லியே!

ஒருவன்: நான் போயி கேக்கிறேன்...இதெ உடப்படாது...விவகாரம் பண்ணிஞத்தான் நம்பளெ மதிப்பான்!

சின்னதம்பி: அவசரப்படாதெ! சின்னப் பையன்! அவனுக்கு என்ன தெரியும்? அவன் பழகிற எடம் பெரிசு! கிராமத்து நிலெ எப்படி தெரியும்!?

மற்றவன்: அப்போ இவன் பட்டணத்திலே பெறந்தவஞ? எல்லாம் நம்பளைப் போல கஷ்டப்பட்டவன் குடும்பத்லெ பெறந்தவன் தானே!

சின்னதம்பி: அதெ மறந்துடுறதிஞலேதான் கிராமம் சீரழியுது! படிச்சவங்கள்ளெ யாரும் பழைய பாதையைத் திரும்பிப் பார்க்கிறதே இல்லியே! அவங்க உதவுஞ பசுவிலே பால் கறக்கிற மாதிரி பனையிலே இருந்து பதநீர் இறக்க இதுக்குள்ளே மெஷின் ஏதாச்சும் கண்டு பிடிச்சிருக்கலாம்.

ஒருவன்: ஆமா, ஆமா! நீ சொல்ற ஐடியா நல்லாத்தான் இருக்கு!

சின்னதம்பி: (சிரித்துக் கொண்டே) ஏது ஏது, இங்லீசுகூட பேசுறியே!

ஒருவன்: (தலையைச் சொறிந்து கொண்டே) இங்லீசு எப்படியோ வந்துடுச்சி! ஏன்னு, என் மகன் ஒம்பது படிக்கிருன்...அவன் ஏதாவது பேசும் போது ஊட ஊட இப்படி ஏதாச்சும் சொல்லுவான்...அப்படியே பழக்கத்திலே வந்துடுச்சி!

சின்னதம்பி: இப்படியே நம்ப பிள்ளைங்க எல்லாம் படிச்சிட்டா இந்தத் தொழிலுக்கு இனிமே ஆளே இருக்காதே!

மற்றவன்: நிச்சயமா இருக்காது. நீ சொன்ன மாதிரி கருவி ஏதாச்சும் கண்டு பிடிச்சி, பனையேறக் கத்துக் கொடுத்தாத்தான் அழியாமெ இருக்கும். இல்லேன்னு பனைத் தொழிலே இருந்த இடந் தெரியமெ அழிஞ்சுடும்.

இரண்டு பேர்: போகும்போது இனிமே பேசலாம். போகட்டுமா?

சின்னதம்பி: சரி, சரி...

காட்சி 3

இடம் : பனைப் பண்ணை.

உறுப்பினர்கள் : பார்வதி, கண்ணம்மாள், சின்னத்தம்பி.

காலம் : நண்பகல்.

[பக்கத்துப் பனைப் பண்ணையிலுள்ள பார்வதி செரட்டை வாங்குவதற்காக சின்னத்தம்பியின் பண்ணைக்கு வருகிருள். அப்போது மணலில் துணி பரப்பி, செரட்டைகளைப் பதித்துப் பாகை வார்த்துக் கொண்டிருக்கிருள் கண்ணம்மாள்.]

பார்வதி : எக்கா! எக்கா!...எக்கா!

கண்ணம்மா : [ஒரு காலை மேட்டிலும், மற்ருெரு காலைத் தரையிலும் வைத்துக் குனிந்த வண்ணம் மேடான பாகத்தில் பதிக்கப்பட்ட செரட்டையில் பாகை ஊற்றிய வண்ணம் திரும்புகிருள்—ஓலையில் தோய்த்து கொடுக்கப்பட்ட பாகைச் சுவைத்த வண்ணம் திண்ணையில் குழந்தை கால் நீட்டி உட்கார்ந்திருக்கிறது.] ஓ! பார்வதியா? வா, வா! என்ன அத்திபூத்த மாதிரி...

பார்வதி : [மூக்கின்மேல் விரல் வைத்தபடி] அடி, ஆத்தாடி! பொடிப் பய ஜோரா சப்புக் கொட்டுருனே!...அது சரிக்கா, இன்னும் நீ இந்தத் தாழிப் பனையை விடல்லியா?

கண்ணம்மா : இதெ விட்டுட்டா பொழக்கிறது எப்படி? நமக்கு இருக்கிற மாதிரிதான் எல்லாருக்கும் ரெண்டு கைதான் இருக்கு. சிலர் சாப்பிடுறதுக்கு மட்டுமே உபயோகிக்கிருங்க! நாம் சாப்பாட்டுக்கு ஒழைக்கிறதுக்கு உபயோகிச்சுத்தானே ஆகணும்! கார் ஓட்டுற கையும், கதிர் அறுக்கிற கையும் ஒண்ணுதான்! ஆனல் நமக்கும் அவங்களுக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கு.

பார்வதி : இவ்வளவெல்லாம் பேசத்தெரிஞ்ச ஒனக்கு உலக நடப்பு தெரியல்லியேக்கா?

கண்ணம்மா : உலக நடப்பா? அதெ ஏன் நான் பார்க்கணும்? அதுக்கும் நமக்கும் காசிக்கும் கன்னியாகுமரிக்கும் உள்ள தூரமாச்சே!

பார்வதி : ஊரு ஒலகத்தோடெ அண்டாமெ நம்மை நாமே கீழானவங்க மாதிரி நெனக்கிறதினலே மனசுக்குள்ளேயே ஒரு தாழ்ந்த எண்ணம் உண்டாகும். அது நம்மைப் பின்னுக்குத் தள்ளி வாழ முடியாமெ ஆக்கிடுது. ஒலகத்துக்கெல்லாம் இனிப்பைக் கொடுத்துட்டு நம்ப வாழ்க்கையிலே கசப்பை ஏன் சேர்த்து வைக்கணும்? புத்தியோடெ பொழச்சா யாரிட்டேயும் பல்லக் காட்டவேண்டாம்!

கண்ணம்மா : [அகப்பையைக் கீழே வைத்து விட்டு நிமிர்கிருள்] என்ன சொல்ற பார்வதி? எனக்குப் புரியிருப்போல சொல்லு?

பார்வதி : இந்தா பாருக்கா, முதல்லே இந்த அடுப்பெ மூடிவிடு......தவழ்ற வயசுப் பிள்ளையெ வச்சிக்கிட்டு நீ கொஞ்சம் கவனக் குறைவா இருந்தா, அது அடுப்புக் குழிக்குள்ளே உழுந்துடுச் சின்ஞ என்ன செய்வெ? நானே புது அடுப்புக் கட்டித் தாரேன்! எங்க கொப்பரையிலே காய்ச்சிப் பாரு! சீக்கிரமா காச்சிடலாம்; ஆபத்தும் இல்லெ; விறகும் அதிகம் செலவாகாது; புகைத் தொல்லையும் இருக்காது.

கண்ணம்மா : இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?

பார்வதி : கடலூரிலே இருக்கிற பனைத் தொழில் பள்ளிக்கூடத்திலே என் தம்பி படிச்சிட்டு வந்து சொல்லிக் கொடுத்தான். எங்க வீட்டுக்காரர்கூட பனிச்ச மேட்டிலே, நூறு மரம் ஏறுறதுக்குப் படிச்சிட்டு வந்து, அதுமாதிரியே செய்ருரு. இப்போ சாதாரணமா அஞ்சாறு மணங்கு கருப்பட்டி கெடக்குது. கருப்பட்டியை வாரத்துக்கு ஒரு தடவை ஏல சென்டருக்கு சொசைட்டி மூலம் கொண்டுபோயி விற்கிரேம். எப்படியும் மணங்கு ஏழெட்டு ரூபாய்க்குக் குறையாமெ ஏலம் போவுது. பழைய கடனை எல்லாம் கொடுத்துட்டோம். இப்போ தான் கையிலெ நாலு காசு மிஞ்சுது.

கண்ணம்மா : அடி, அம்மாடி! இதிலெ மிச்சம் வேறெ இருக்கா? படிக்கிறத்துக்குப் பணத்துக்கு எங்க போறது?

பார்வதி: மெட்ராசில நமக்காக ஒரு பெரிய ஆபீசே இருக்காம். அங்க இருந்து பணம் இனுமா கொடுக்கிறுங்க. மாசம் நாப்பது ரூபாய் கொடுக்கிறுங்களாம்!

கண்ணம்மா: இதெல்லாம் எங்க வீட்டுக்கார ருக்குத் தெரியாமப் போச்சே!

பார்வதி: எப்படித் தெரியும்? பனங்காடே தஞ்சமின்னு கிடந்தா எப்படித் தெரியும்? ஒங்க வீட்டுக்காரரு சொசைட்டி பக்கம் வருஷத்துக்கு ஒரு நாளைக்குத் தானே வர்ருறு! லைசன்ஸ் வாங்கற தோட சரி!

[அப்போது காவட்டைப் பண்ணைக்கு வெளியே வைத்துவிட்டு சின்னத் தம்பி உள்ளே நுழைகிருர்.]

சின்னத்தம்பி: வாம்மா பார்வதி, எப்போ வந்தெ?

பார்வதி: இப்பதான் வந்தேன் மச்சான்.

சின்னத்தம்பி: என்ன விசேஷம்?

பார்வதி: அச்சு காணல்லே! கொஞ்சம் செரட்டையாவது வாங்கிக்கிட்டுப் போகலாமின்னு வந்தேன்.

சின்னத்தம்பி: என்ன அச்சு? ஒங்க வீட்டுக் காரரு கரும்பாலே வச்சிருக்காரா? [பார்வதி சிரிக்கிருள்] ஏன் சிரிக்கிறே!

பார்வதி: கருப்பட்டிக்கே இப்போ அச்சு செய்து கொடுக்கிருங்க! தெரியாதா?

சின்னத்தம்பி: அதுவா?...என்ன, என்ன? கருப்பட்டிக்கா?

பார்வதி: ஆமா, ஆமா! நீங்க இன்னும் ஒங்க தாத்தா காலத்தெ விடாமெ இருந்தா, அதிசயமாத்தான் தெரியும்! எங்க பண்ணைக்கு ஒரு நாளைக்கு வந்துட்டுப் போங்க.

சின்னத்தம்பி: எங்கம்மா அதுக்கெல்லாம் நேரம் இருக்குது?

பார்வதி: நீங்க வந்தா, எப்படி புது முறை யிலே தொழில் செய்லாங்கிறதுன்னு கத்துக்கிட்லாம்.

கண்ணம்மா: அவ சொல்படிதான் ஒரு நாளைக்குப் போயிட்டு வாங்களேன்.

சின்னத்தம்பி: சரி, வர்றேம்மா.

பார்வதி: போயிட்டு வரட்டுமாக்கா.

[இருவரும் தலையை ஆட்டுகின்றனர்]

காட்சி 4

இடம்: பார்வதியின் பண்ணை.

உறுப்பினர்கள்: பார்வதி, அவள் கணவன் காளியப்பன், தம்பி, சின்னத்தம்பி.

காலம்: மாலை.

[பார்வதியின் வேண்டுகோளின்படி பண்ணையைப் போய்ப் பார்க்கிருர். நவீன கருவிகளும், முறைகளும் பின்பற்றப் படுவதைக் கண்டு ஆச்சரியமடைகிருர். பார்வதியின் கணவனும், தம்பியும் எல்லா முறை களையும் சொல்லிக் கொடுக்கின்ற னர். ஒருவித மன திருப்தி ஏற் படுகிறது. என்றாலும் சொக்கலிங் கத்தின் மிரட்டல் அவனைப் பய முறுத்துகிறது.]

காளியப்பன்: என்னண்ணே மிரள்ற? இவ் வளவு சாமாங்களையும் வாங்கப் பணம் ஏதுன்னு நெனக்கிறியா?

சின்னத்தம்பி: அதெல்லாம் ஒண்ணும் இல்லெ?

காளியப்பன்: எனக்கு உன் மனசு புரியுது. சொக்கலிங்கத்துக்கிட்டே மாட்டிக்கிட் டோமே எப்படி மீள்றதுன்னு நெனக் கிற. இல்லியா?

சின்னத்தம்பி: எப்படி கண்டுபிடிச்ச?

காளியப்பன்: இந்த சங்கத்திலெ இருக்கிற ஒவ்வொரு மெம்பரைப் பத்தியும் எனக்கு நல்லாத் தெரியும்...இல்லேன்னு பிரசி டென்டா இருக்க முடியுமா?

சின்னத்தம்பி: நீயா?

காளியப்பன்: ஏன்? சந்தேகமா? நானும், நீயும் பனை ஏறுறோம்! நம்ப சங்கத்தை நாமே நடத்தாமே போனு வேறு யாரு நம்மேலே அக்கறை காட்டுவாங்க? சாட்சாத் நானே தான் பிரசிடெண்டு! பனையும் ஏறுவேன்! கணக்கும் எழுது வேன்! நிர்வாகமும் செய்வேன்! என் திறமையை நான் சந்தேகப்பட்ட காலம் மலை ஏறிப் போச்சு!

சின்னத்தம்பி: நீ நல்ல தைரியசாலிதான்.

காளியப்பன் : தைரியம் தான் வெற்றியின் முதல்படி. நீ இராத்திரிக் கூட்டத்துக்கு வாண்ணே. ஒரு 'லோன் அப்ளிக் கேஷன் எழுதிக்கொடு ; மாநில சம் மேளனத்திற்கு சிபாரிசு செய்தனுப்பு றேன். பணம் வந்ததும் தெம்போட தொழிலை ஆரம்பி.

சின்னத்தம்பி : மாநில சம்மேளனமா? நம்ம ஊரிலே இருக்கவங்களே கருப்பட்டியை யும், நாணயத்தையும் நம்பிதான் பணங் கொடுக்கிறாங்க. பட்டணத்திலே இருந்து பணங்கொடுக்கிறது யாருப்பா? அதிசயமா இருக்கே?

காளியப்பன் : எல்லாம் நம்ப பெடரேஷன் தான். நம்ம விருதுநகர் வி. வி. ஆர். ஐயாதான் அதுக்குப் பிரசிடெண்டு. மாநில சம்மேளனமும், கதர் போர்டும் மலைபோல இருக்கும்போது நாம் என் அஞ்சவேண்டும்?

கண்ணம்மாவின் கணவன் சின்னத் தம்பி, காளியப்பன் சொல்படி நடந்து முன்னேறுகிறார். நான் ஏன் அஞ்ச வேண்டும் என்ற எண்ணத்தோடு சமுதாயத்தோடு ஒன்றிப் பழகி சிறப்புறுகிறார். ஊராட்சி மன்ற நிர்வாகத்திலும், இதர பல காரியங்களிலும் சின்னத் தம்பி கலந்து கொள்கிறார். இதனால் அவரை யாரும் தாழ்வாகக் கருது வதில்லை. தூத்துக்குடி மாநாட்டில் சங்கப் பிரதிநிதியாகக் கலந்து பல பிரச்சினைகளை விவாதிக்கிறார். மாநில சம்மேளனத் தலைவர் அவர் களின் உரையைக் கேட்டு மேலும் ஊக்கம் பெறுகிறார். நம் தொழிலைக் காக்கவும், வளர்க்கவும் நமக்கென ஒரு ஸ்தாபனம் செயல்படுகிறது என்பதை அறிந்து ஊக்கமடை கிறார்; உயர்வடைகிறார். கூட்டு றவு முறையில் தளராத உறுதிக் கொள்கிறார்.]

[திரை]

மூளை வியாதி

குழந்தைகள் பிறக்கும்போது நல்ல மூளைபலம் கொண்டவை களாக உள்ளன. ஆனால், உணவு செரிப்பதற்கான சக்திமட்டும் சற்றுக் குறைவாக உள்ளது. 26 புரதச் சத்துக்களில் ஒன்றான 'பெனிலெடி னைன்' என்பதைச் ஜீரணிக்க முடியாததால் இக்கோளாறு ஏற்படுகிறது. உடலில் தங்கிவிட்ட உயிர்ச்சத்து ஈரல், மூத்திரக்காய், மூளைகளைப் பாதிக்கிறது. இக்கோளாறுக்கு உட்படுபவர்கள் சித்த சுவாதீனமற்றவர்களாகிறார்கள் என்று ஜெர்மன் விஞ்ஞானிகள் ஆராய்ந்துள்ளனர்.

மனிதனுக்கு உணவும், உறைவிடமும் அளிக்கும் தரு

(சென்ற மாதத் தொடர்ச்சி)

பனஞ்சீனி.

பனைவெல்லத்தைப் போலவே ஒரு பரந்த வாணலியில் பனஞ் சாற்றிலிருந்து சீனி வழக்கம் போல தயாரிக்கப்பட்டு வருகிறது. குவியல் முறையில் பனஞ்சீனி தயாரிக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன; ஆனால் அது கட்டுபடியாகவில்லை; செலவுதான் மிகக் கூடுதலாகிறது. வர வர பனஞ்சீனிக்கு கிராக்கி அதிகமாகிக் கொண்டு வருகின்றது. இத்தேவையைச் சமாளிக்க, சிறிய வாணலிகளில் சிக்கனமாகவும் கட்டுபடியாகக் கூடிய வகையிலும் பனஞ்சீனி உற்பத்தி செய்யப் பரிசோதனைகள் செய்யப்பட்டன. இவற்றின் விளைவாக சிறிய சூன்ய சீனி வாணலிகள் உருவாயின. கிராமங்களில் உள்ள நிலைமைகளில் தொழிலைப் பரவலாக்கும் நோக்கத்துடன் இவை பராமரிக்கப்பட்டு வருகின்றன. நாள் ஒன்றுக்கு ⅛ டன், ½ டன், 1 டன் உற்பத்திசெய்யும் சக்தி வாய்ந்த வாணலிகளாகும் அவை.

சென்னை, ஆந்திரா, பஞ்சாப், மகாராஷ்டிரம், பீகார், மைசூர், கேரளம், மத்தியப் பிரதேசம் ஆகிய பிரதேசங்களில் சூனியக் கொப்பரைகளில் பனஞ்சீனி தயாரிக்கும் முறை கையாளப்பட்டு வருகிறது.

பதநீரில் 8 சத விகித அடிப்படையில் பனஞ்சீனி கிடைக்கிறது. மூடப்பட்ட நீராவிக் கொப்பரையின் உதவியால் புது முறையால் நல்ல ரக சர்பத் தயாரித்து அதன் மூலம் பனஞ்சீனியை உற்பத்தி செய்வதற்காக, மேற்கொண்டு சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு பரிசோதனையில் இருந்து வருகிறது.

திறந்த கொப்பரை, சூன்யக் கொப்பரை ஆகியவற்றின் மூலம் தயாரிக்கப்படும் பனஞ்சீனியில் அடங்கியுள்ள சத்துக்கள் பற்றிய விவரம் கீழே தரப்படுகிறது:—

சத்துக்கள் விவரம்.		சூன்யக் கொப்பரை	திறந்த கொப்பரை
சர்க்கரைச் சத்து	...	99·34 %	96·7 %
பழுப்புச் சீனி	...	00·12 %	00·22 %
ஈரப்பதம்	...	00·081 %	00·095 %
சாம்பல்	...	00·158 %	00·204 %

சீனித் தொழிலில், பாகை எப்படி பயன்படுத்துவது என்பது ஒரு சிக்கல் ஆகும். ஆனால், பனைவெல்ல உற்பத்தித் தொழிலில் எஞ்சியிருக்கும் பாகு சர்பத், மிட்டாய், சர்பத், மது பிராஷ் போன்ற பல ரக சர்பத்துகள் தயாரிக்க உதவுகின்றன. இது தவிர, பல வகைப் பனைப் பொருள்கள் தயாரிக்கவும், பழங்களைப் பாதுகாப்பாக வைக்கவும், ஆடு மாடுகள் தீவனமாகவும் அது உபயோகிக்கப்படுகிறது.

பதப்படுத்தாத பதநீரிலிருந்து சராசரி 6 முதல் 8 சத விகித பாகு கிடைக்கிறது. இப்பாகில் உலோகச் சத்துக்கள், வைட்டமின்கள் உள்பட அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் பெரும் அளவில் அடங்கியுள்ளன என்று பாகைப் பரிசோதனை செய்ததன் மூலம் தெரியவருகிறது. பாகில் போஷாக்குச் சத்து உள்ளது என்றும் ஏற்கனவே மருத்துவ நிபுணரால் உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

பனைவெல்லப் பாகைப் பரிசோதனை செய்ததில் கீழ்க்கண்ட சத்துக்கள் அடங்கியுள்ளதாகத் தெரியவந்தது:—

		சத விகிதம்
கரையும் பிரிக்ஸ்கட்டிச் சத்துக்கள்	...	67·86
சர்க்கரைச் சத்து	...	46·00
குறையும் சர்க்கரை	...	8·8
மொத்தம் சர்க்கரை	...	54·8

		சத விகிதம்
உலோகச் சத்துக்கள் (கா. இரும்பு, பாஸ்பரஸ் முதலியன	...	3.2
நைட்ரஜன் (புரோட்டீன்)	...	1·74
வைட்டமின்கள் :		
தியாயமின் மைக்ரோ கிராம் 100 கிராம்		1·60
ரிபோபிளேவின் ,,	...	4·29
நைகோடினிக் அமிலம் ,,	...	1·98

மேற்கொண்டும், பாகிலிருந்து காடி தயாரிப்பதற்கான பரிசோதனைகள் வெற்றி கரமாக செய்து முடிக்கப்பெற்றன. அதே போல பல பொருள்களை உற்பத்தி செய்ய, பாகின் நிறத்தைப் போக்கவும் பரிசோதனை கள் செய்யப்பட்டு விட்டன. காடியை உற் பத்தி செய்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன.

பனங்கற்கண்டு

கருப்பஞ் சாற்றிலிருந்து நேரிடையாக கற்கண்டு தயாரிக்க முடியாது; ஆனல் பதநீரைக் காய்ச்சி கற்கண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. இம்மாதிரி தயாரிக்கப் பட்ட கற்கண்டு உயர்தர மருந்துக் குணம் உள்ளது. சென்னையிலும், வங்காளத்திலும் பரம்பரையாக கற்கண்டு உற்பத்தி செய்யப் பட்டு வருகிறது. அதனல் நல்ல வருமான மும் கிடைத்து வந்தது. புதிய முறையில் 107 டிகிரி முதல் 108 டிகிரி (சென்டிகிரேட்) வரை பதநீரைக் காய்ச்சி கற்கண்டு தயாரிக்க படுகிறது. இப்படி காய்ச்சின கொதி பதநீர் பாதுகாக்கப்பட்ட கொப்பரைகளில் கொட்டி 30 நாட்கள் வரை வைத்திருக்க வேண்டும். இதற்குள் கற்கண்டு படிவங்கள் உருவாகி விடும். ஆயுர்வேத வைத்திய முறையில் நோய்களைக் குணப்படுத்துவதற்குப் பனங் கற்கண்டு பயன் படுகிறது.

பனஞ்சீனியைக் காய்ச்சி கற்கண்டு தயாரிக்கப்படுவது மற்றொரு புதுமுறை ஆகும். இம்முறையைக் கையாள்வதால் 10 நாட்களில் இம்மாதிரியான கற்கண்டு கிடைக்கும். நல்ல ரகப் பனங்கற்கண்டை தயாரிப்பதற்காக, படிகத் தொட்டிகள், உஷ்ணப் பாதுகாப்பு முறைகள், கொதிக்க வைத்தல், படிகத் தொட்டிகளில் தொங்க விடும் கொரட்டிகள் ஆகியவற்றிலும் ஏராள மான சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. புது நுணுக்க முறைகளினல் கற்கண்டுப் படிகங்கள் உருவகமாகும் காலமும் கணிச மாகக் குறைக்கப் பட்டுள்ளது.

இந்திய மருத்துவக் கழக ஆராய்ச்சியின் போஷாக்குப் பரிசோதனைப் பிரிவினரால் பல ரகக் கற்கண்டுகளும் ஆராய்ச்சி செய்யப் பட்டதில், கீழ்க்கண்டவாறு போஷாக்குச் சத்துகள் இருப்பதாகக் கண்டுப் பிடிக்கப் பட்டன.

விவரம்		பதநீர்க் கற்கண்டு	பனஞ்சீனி கற்கண்டு	ஈந்தப் பதநீர் கற்கண்டு	ஈந்தப் பனஞ் சீனி கற்கண்டு
		(1)	(2)	(3)	(4)
1. ஈரத்தன்மை %	...	0·7	0·06	0·8	0·03
2. புரோட்டீன் %	...	0·2	0·05	0·2	0·08
3. கொழுப்பு %	...	0·04	0·07	0·03	0·05
4. உலோகங்கள் %	...	0·3	0·06	0·5	0·1
5. கார்போஹைட்ரேட்டு%		98·76	99·76	98·42	99·74
6. கால்ஷியம்(Ca) m.g./%		58·70	18·9	55·6	32·6
7. பாஸ்பரஸ் P (m.g.) %		5·4	1·9	6·2	1·4
8. இரும்பு (Fe) m.g. %	...	1·4	5·2	20·2	11·6
9. கலாப்ரிக் சத்து (100 கிராம்)	...	396	400	395	400
10. ரிபோபிடேவின் m.g. (100 gram)	...	8·2	Nil	18·4	Nil

பதநீரின் அடிப்படையில் 7 முதல் 8 சத விகிதம் பனங்கற்கண்டு கிடைக்கிறது.

கற்கண்டு தனியாக எடுக்கப்பட்டபின், மீதமுள்ள தாய்ப் பாகு, சீனி செய்வதற்காக மறுபடியும் காய்ச்சப்படலாம். நுகருவதற் காக அதைக் காய்ச்சி பலரக நறுமணமுள்ள தாகச் செய்து பாட்டில்களில் அடைத்து வைக்கலாம். இந்த மாதிரி தயாரிக்கப்பட்ட 'சர்பத்' நல்ல சத்துள்ள பானமாகும். தண்ணீரில் கலந்து பருகப்பட்டு வருகிறது.